## செங்கோட்டை நகராட்சியின் அவசர கூட்டம் 20.10.2021 அன்று நடைபெற்றது

மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் எண்.TN76AA 1237 ன் டைனமோ பழுதாகிய காரணத்தால் வாகனத்தை இயக்க இயலாத சூழல் ஏற்பட்டதை தொடர்ந்து மேற்படி டைனமோவை கழற்றி பழுது நீக்கம் செய்து வாகனத்தில் பொருத்துவதற்கு அவசர அவசியம் கருதி 2 உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது விலைப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீதேவி ஆட்டோ எலக்டிரிக்கல்ஸ், தென்காசி | ரூ.2800 |
| 2. | ஐயப்பன், ஆட்டோ எலக்டிரிக்கல்ஸ், செங்கோட்டை | ரூ.3000 |

அ.கு

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் ஸ்ரீதேவி ஆட்டோ எலக்டிரிக்கல்ஸ், தென்காசி நிறுவன விலைப்புள்ளி தொகை குறைவாக உள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் அதற்கான செலவினதை வருவாய் நிதியில் செல செய்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது.

.

மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை (Total Station) தனியார் நிறுவன நில அளவையாளர்கள் மூலம் நில அளவு மேற்கொண்டு சேகரமான குப்பைகளின் கன அளவினை அளவீடு செய்ய 17.09.2021 வெள்ளிக்கிழமை உள்ளும் மற்றும் வெளியூர் விலைப்புள்ளிகள் கோரப்படத்தில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | XY2 Survyes, Sidapet | 14000 + GST 18% |
| 2. | Step Land Consultant, Puduchery | 12000 + GST 18% |
| 3. | Continent Survey, Chennai | 13500 + GST 18% |

அ.கு

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் Step Land Consultant, Puduchery நிறுவனத்தால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி வரிசை எண்.2ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Step Land Consultant, Puduchery நிறுவனத்திற்கு தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சியின் எல்லைகள் உள்ளடக்கிய வரைபடம் நகர அளவை செய்து தயார் செய்து வழங்கும் பணிக்குரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 17.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்னு பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1. | Safe Solutions, Erode | மதிப்பீட்டைவிட 6.67% அதிகம் |
| 2. | D.B.Info Solutions, Chennai | மதிப்பீட்டு விகிதம் |

அ.கு

1.வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் D.B.Info Solutions, Chennai நிறுவனத்தால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

.

2. அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்ந்தப்புள்ளி கொடுத்துள்ள D.B.Info Solutions, Chennai நிறுவனத்திற்கு தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சியின் குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையினை உயர்த்தி வசூலிக்க குடிநீர் உபவிதிகளில் திருத்தம் செய்வதற்கு மாவட்ட அரசிதழில் 17 பக்கங்கள் பிரசுதம் செய்ய ரூ.37800/- அரசு தலைக்கில் செலுத்தப்பட்டுள்ளது. அரசு தலைப்பிர் செலுத்தப்பட்ட செல்லான் மற்றும குடிநீர் உபவிதிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மூலம் மதுரைக்க அனுப்பி வைக்கப்பட்டுள்ளது மாவட்ட அரசிதழ் அலுவலகம் மதுரையிலிருந்து வரப்பெற்ற தொலைபேசி செய்தியில் குடிநீர் உபவிதிகள் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கு கூடுதல் 2 பக்கங்களுக்க ரூ.4200/- அரசு கணக்கில் செலுத்தி அதன் நகலினை மாவட்ட அரசிதழ் அலுவலகம் மதுரைக்கு அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது மேற்படி ரூ.4200/- குடிநீர் நிதியில் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்

தீர்மானம்

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவிலுள்ள பேட்டரி வாகனங்கள் 6 எண்ணம் பழுது நீக்கும் பணி மேற்கொள்ள 22.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | Selvam Enterprises, Coimbatotre | 4.70 | மதிப்பீட்டை விட 4.48% அதிகம் |
| 2. | Sharp Systems . Coimbatore | | மதிப்பீட்டு விகிதம் |

அ.கு

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் Sharp Systems . Coimbatore நிறுவனத்தால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம்

அனுமதி வழுங்கப்பட்டது.

<u>மன்றபொருள்</u>

செங்கோட்டை நகராட்சியின் 24 வார்டுகளிலும் உள்ள ஆழ்துளை கிணற்று கைபம்புகள் 113 எண்கள் பழுது நீக்கம் செய்யவும் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் 2021-2022 ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1.60 லட்சத்திற்கு தயார் செய்யப்படுள்ளது மேற்படி பணிகளை செய்யவும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு

அ.கு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1418/2021/இ1)

தீர்மானம்

அனுமதி வழுங்கப்பட்டது.

<u>மன்றபொருள்</u>

செங்கோட்டை நகராட்சியின் 24 வார்டுகளிலும் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் குடிநீர் பகிர்மான குழாய் , Pumping Main ஆகியவற்றில் ஏற்படும் கசிவு மற்றும் உடைப்புகளை சரி செய்ய 2021-2022 ம் ஆண்டிற்கு வருடாந்திர உத்தேச செலவினம் ரூ.4.00 லட்சம் ஆகும். மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு

அ.கு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1418/2021/இ1)

தீர்மானம்

அனுமதி வழுங்கப்பட்டது.

மன்றபொருள்

செங்கோட்டை நகராட்சியின் 24 வார்டுகளிலும் உள்ள சிறுமின் விசை மோட்டார் பம்புகள், கம்பிரசர் மோட்டர், திறந்தவெளி கிணற்று மோட்டார்கள் மற்றும் MCC மையத்தில் அமைந்துள்ள மோட்டார்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுளை நீக்கி இயக்க 2021–2022 ம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.5.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்யவும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு

அ.கு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1419/2021/இ1)

தீர்மானம்

அனுமதி வழுங்கப்பட்டது.

மன்றப் பொருள்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 29280/2020/IT நாள் 29.09.2021ன் படி இந்நகராட்சிக்கான UTIS (Urban Tree Information System Payment of Bandwidth cost of 6 months Periods) தறைதள இணையதள சேவைக் கட்டணம் தற்போது 01.01.2021 முதல் 31.03.2021 ரூ.48295/- மற்றும் 01.04.2021 முதல் 30.06.2021 வரை ரூ.48295/- மொத்தம் ரூ.96590/- பி.எஸ்.எல்.எல் நிறுவனத்திற்கு செலுத்திட தெரிவிக்கப்பட்டதின் படி மேற்படி தொகையினை செலுத்திட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ;

1. மேற்படி தொகையினை செலுத்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கேட்பு தொகை ரூ.96,590/- வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம்

அனுமதி வழுங்கப்பட்டது.

மன்றப் பொருள்

செங்கோட்டை நகராட்சி எஸ்.ஆர்.கே தெருவில் திரு.ஆறுமுகம் என்பவர் கட்டிட விதிமுறைகளுக்கு புறம்பாக கட்டிடம் கட்டி மற்றும் ஆக்கிரமிப்பு செய்து இருப்பதாக திரு.அக்கினிராஜ் என்பவரின் புகார் மனுவின் படி 05.07.2017ல்

மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 182ன் படி திரு.ஆறுமுகம் என்பவருக்கு அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிறகும் மேற்படி ஆக்கிரமிப்புகளை அன்னார் அகற்றாததால் 09.01.2018ல் இறுதி அறிவிப்பு மேற்கண்ட சட்டத்தின் படி வழங்கப்பட்டுள்ளது. அதன் பிறகு திரு.ஆறுமுகம் கடந்த 08.02.2018ல் செங்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு ஓ.எஸ். எண் 7/2018 மற்றும் ஐ.ஏ எண் 56/2018 இந்நகராட்சி அறிவிப்பு கடிதத்திற்கு எதிராக தாக்கல் செய்துள்ளதனை எதிர்த்து இந்நகராட்சி சார்பிலும் எதுர்வாதுரை 18.07.2018ல் தாக்கல் செய்யப்பட்டது. மேற்காணும் வழக்கானது இந்நகராட்சிக்கு சாதகமாக01–04–2021ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. எனவே இந்நகராட்சி சார்பில் எதிர்வாதுரை தயார் செய்து வழக்கின் மீது ஆஜரானதற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.2660 தொகையினை இந்நகர்மன்ற வழக்கறிஞர் திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி , வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண் ; 264/2019/எப் 1

அலுவலகக் குறிப்பு ;

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்**

**அனுமதி வழங்கப்பட்டது.**

**செங்கோட்டை நகராட்சியின் சாதரணக் கூட்டம் 29.10.2021 அன்று நடைபெற்றது**

<u>மன்றப்பொருள் :</u>

செங்கோட்டை நகராட்சியில் மின்கம்பி உதவியாளராக திரு செ.ராஜு என்பவர் 01.11.1989-ல் நியமனம் செய்யப்பட்ட நிலையில் மேற்படி பணியிடத்திலிருந்து 24.06.2008 தேதி வரை பதவி உயர்வுக்கான வழிவகை இல்லாமல் இருந்ததால் பார்வை 1மற்றும் 2ல் கண்டுள்ள அரசு கடிதம் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் 01.01.2006 முன்னரே தேர்வு நிலை/ சிறப்பு நிலை அடைந்தவர்கள் அல்லது 01.01.2006 முதல் 24.06.2008 வரையுள்ள இடைப்பட்ட காலத்தில் (மின் கம்பி உதவியாளர்) வயர்மென் ஹெல்பர் பணியிடத்தில் தேர்வு நிலை/ சிறப்பு நிலை அடைந்தவர்கள் அந்நாள் முதல் (i.e. from the date of award selection Grade) தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் 2009-ன் படி மின் கம்பியாளர்கள் (Wiremen) பதவி உயர்வு பணியிடததிற்கான ஊதிய விகிதத்திற்கு கட்டுப்படுத்தாமல் அரசு கடித எண் 63305/ஊ.கு/2020-1, நாள்.08.11.2010-ல் தேர்வு நிலையில் 9300-34800+4200 தர ஊதியம் என 01.01.2006 முதல் ஊதிய நிரக்கில் ஊதியம் நிர்ணயம் செய்தும் பணப்பயன் 01.04.2013 முதல் வழங்கவும் தெரிவித்ததின் பேரில் மேற்படி 9300-34800+4200 தர ஊதியத்தில் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு தொடர்ந்து அரசாணை எண்.303 நிதி(ஊ.கு) துறை நாள்.11.10.2017-ன் படி ஊதியம் 35400-112400 என்ற நிலையில் ஊதியம் ரூபாய்.50,500/-என 01.01.2016 முதல் நிர்ணயம் செய்தும் வருடாந்திர ஊதிய உயர்வுகள் வழங்கப்பட்டு, 01.01.2006 முதல் 9300-34800 +4200 தர ஊதியம் பெறப்பட்டு வரும் நிலையில் அன்னாரது பி.நா.25.05.1961ஐ கணக்கிட்டு 31.05.2019-ல் 58 வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற அனுமதிக்கப்படாத நிலையில் 28.02.2021 வரை பணிபுரிந்து உள்ளார்.

பார்வை 4ல் கண்டுள்ள அரசு கடிதத்தில் நகராட்சியில் பணிபுரிந்த வரும் மின்கம்பி உதவியாளர்களின் பணி அடிப்படை பணிகள் அல்லாமல் சார்நிலை பணிகள் என்பதால் பணியாளர்களின் ஓய்வு பெறும் வயதினை அடிப்படை விதி 56 (1(a)ன் படி 58 வயதாகும் எனவும், மேலும் அரசாணை (நிலை) எண்.51, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்ததுறை துறை நாள்.07.05..2020 மற்றும் அரசாணை (நிலை) எண்.62, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்ததுறை நாள்.01.06.2020-ல் வெளியிடப்பட்ட திருத்தங்களின்படி நகராட்சியில் பணிபுரியும் மின் கம்பி உதவியாளர்களின் பணி ஓய்வு வயது 58 லிருந்து 59 ஆகும் என தெரிவித்ததின் பேரில் பார்வை 5ல் கண்டுள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் அரசு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தெளிவுரையின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டதின் பேரில் அன்னாரை மேற்படி அரசு கடிதம் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடிதத்தின் படி அன்னாரது பிறந்த நாளான 25.05.1961-ம் நாளை கணக்கில் கொண்டு 31.05.2019 அன்று ஓய்வு பெறும் நாளாக கணக்கிட்டு பார்வை 6 மற்றும் 7ல் கண்டுள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் மற்றும் நகராட்சி ஆணையாளர் செயல்முறை கடிதத்தின் படி

28.02.2021 அன்று ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் தனியர் 31.05.2019 அன்று இறுதியாக பெறப்பட்ட ஊதியம் ரூ.55200/-க்கு பார்வை 8ல் கண்டுள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் பணியாளர் 01.06.2019 முதல் 28.02.2021 முடிய கூடுதலாக பணிபுரிந்த காலத்தினை மறு பணிக்காலமாக கருதி அரசின் பின்னேற்பு பெறப்பட்டு முறைப்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்நகராட்சி மின்கம்பி உதவியாளர் திரு செ.ராஜு என்பவரை அன்னார் பிறந்த நாள் 25.05.1961-ன்படி 58 வயது பூர்த்தி செய்யும் நாளான 31.05.2019-ல் ஓய்வு பெற அனுமதிக்காமல் 01.06.2019 முதல் 28.02.2021 வரை பணிபுரிந்த காலத்தினை மறு பணிக்காலமாக முறைப்படுத்திடவும் அரசின் பின்னேற்பு ஆணை பெறவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ;

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மானம்**

**அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>மன்றப் பொருள் ;</u>**

செங்கோட்டை நகராட்சி அம்மா உணவகத்தின் வரவு செலவு முன்னோட்டத்தின் வரவினை விட செலவு அதிகமாக உள்ளது. எனவே தற்போது அம்மா உணவகத்தினை செயல்படுத்திட வருவாய் மற்றும் மூலதன நிதி மூலம் ரூ.1,00,000/- அம்மா உணவக நிதிக்கு உள்நிதி மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ;

1. **2021–2022**ம் நிதியாண்டில் அம்மா உணவகத்தினை செயல்படுத்திட போதிய நிதி ஆதாரத்திற்கு வருவாய் மற்றும் மூத்தன நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யவும் தற்போது ரூ.**1.00.** லட்சம் வழங்கிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்**

**அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>மன்றப் பொருள் ;</u>**

தொழிலாளர் சேமநலநிதி தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் நடைபெற்ற வழக்கு எண் WP(MD) No 19993/2019 க்கு ஆணையாளர் சார்பில் ஆஜராகிய வகைக்கு வழக்கு கட்டணம் ரூ.9500/- வழக்கறிஞர் திரு.எம்.சரவணக்குமார் க்கு வழங்க வேண்டியுள்ளது. மேற்படி கட்டணம் வழங்கவும், அதற்கான தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு ;

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்** **அனுமதி வழங்கப்பட்டது.**

**மன்றப் பொருள் ;**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக மாபெரும் தூய்மைப் பணி முகாம் (மெகா கால்வாய்கள் மற்றும் மழைநீர் வடிகால்கள் தூய்மைப் படுத்தும் திட்டத்தின் கீழ் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், தென்காசி அவர்களின் ஆய்வுகை கூட்டம் அறிவரை நாள் 18–09–2021ன் படியும் செங்கோட்டை நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து மெகா கால்வாய்கள் மற்றும் மழைநீர் வடிகால்களை 21–09–2021 மற்றும் 22–09–2021 ஆகிய இரண்டு தினங்கள் தனியார் இயந்திர வாகனங்கள் ஜே.சி.பி மற்றும் டிராக்டர்கள் கொண்டு தூய்மைப் படுத்தும் பணிகள் மேற்கொள்ளவும், அரசின் திட்டம் என்பதால் அவசர அவசியம் கருதி 20–09–2021ம் தேதி உள்ளூர் விலைப்புள்ளி கோரியதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | திரு.எஸ்.லெட்சுமணன்,<br><br>சுதன் எர்த் மூவர்ஸ், செங்கோட்டை என்பவருடைய ஒப்பந்தப்புள்ளி தொகை | திரு.கே.தங்கம்,<br><br>செல்வா எர்த் மூவர்ஸ், செங்கோட்டை |
|---|---|---|---|
| 1 | மெகா கால்வாய்கள் மற்றும் மழைநீர் வடிகால்கள் தூய்மைப்படுத்தும் பணி மேற்கொள்ள ஜே.சி.பி இயந்திரம் இயக்குதல் பணிகள் | ரூ.1000/- ஒரு மணி நேரத்திற்கு | ரூ.900/- ஒரு மணி நேரத்திற்கு |

ந.க.எண் ;1551/2021/எச்1

அலுவலகக் குறிப்பு ;

1. அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி அரசின் திட்டம் என்பதால், உடன் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி குறைவாக விலைப்புள்ளி வ.ழங்கிய திரு.கே.தங்கம், செல்வா எர்த் மூவர்ஸ், செங்கோட்டை என்பவருடைய நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத்தினை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ல் வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் ;**

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களின் மூலம் பெறப்படும் வரவினங்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரிக் கட்டணம் வசூல் செய்து மத்திய சேவைவரிக் கணக்கில் செலுத்தி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணியினை மேற்கொள்ள வேண்டும். எனவே இந்நகராட்சி சார்பில் அசோஸியேடேட் அக்கவுண்டன்ஸ் பிரைவேட் லிமிடெட், தென்காசி நிறுவனத்தின் மூலம் மாதம் தோறும் வசூல் செய்யும் அசையாச் சொத்திற்கான சேவை வரிக் கட்டணத்தினை மத்திய சேவை வரிக் கணக்கில் செலுத்தும் சலான்களை பதிவிறக்கம் செய்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணி மேற்கொள்வதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகையினை இந்நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் இருந்து செலவிடுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண் ;1130/2013/எச்1

அலுவலகக் குறிப்பு ; மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

அனுமதி வழங்கப்பட்டது.

**மன்றப் பொருள் ;**

2021–2022 ஆம் ஆண்டில் ஒப்பந்தக்காரர்கள் பணியாளர்கள் ஆகியோர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் வருமான வரி மற்றும் GST அரசு தலைப்பில் செலுத்தி உடன் E-file செய்வது சட்டப் படியான ஒன்று என்பதாலும் இவை பட்டய கணக்கர் மூலமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்பதாலும் இந்நகராட்சிக்கு Associated Accountants என்ற பட்டய கணக்கர் மூலம் பதிவு செய்வதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக் குறிப்பு ;

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்**

அனுமதி வழங்கப்பட்டது.

<u>மன்றப் பொருள் ;</u>

இந்நகராட்சியில் பணிபுரிந்து காலமான திருமதி.கு.இசக்கியம்மாள், தூய்மை பணியாளராக பணிபுரிந்த காலத்தில் ஊதியத்தில் பிடித்தம் செய்த சிறப்பு சேமநல நிதித் தொகைக்கான வட்டி ரூ.3807 அன்னாரின் வாரிசுகளுக்கு வழங்கிட வேண்டியதுந இந்நகராட்சியின் நிதிநிலை குறைபாடு காரணமாக அவ்வப்போது தொகை செலுத்தாத காரணத்தினால் சொந்த நிதி ஏற்படுத்ட்ட வழிவகை இல்லாத சூழல் உள்ளது. எனவே மேற்படி தொகையினை பொதுநிதியில் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்காக வேண்டப்படுகிறது.

அலுவலக க் குறிப்பு ;

1. மேற்படி தொகையினை வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத் தொகை ரூ.3807 வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**அனுமதி வழங்கப்பட்டது.**

<u>மன்றப்பொருள்</u>

செங்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான கீழ்கண்ட ஆண்டு குத்தகை இனங்கள் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் அனுபவித்துக் கொள்ள பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் வழங்கிய குத்தகை இனங்கள் 31–03–2022 உடன் முடிவடைய இருப்பதால், 01–04–2022 முதல் 31–03–2025 வரை மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | ஆண்டு குத்தகை இனம் | ஏலப் பொறுப்புத் தொகை ரூ. | பிணைய வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி வாரச் சந்தையில் உள்ள கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | 2,00,000/- | 1,00,000/- |
| 2 | செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | 1,00,000/- | 1,00,000/- |
| 3 | செங்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள | 50,000/- | 50,000/- |

| | | | |
|---|---|---|---|
| | கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | | |
| 4 | செங்கோட்டை நகராட்சி சாலையோர வியாபாரிகளிடமிருந்து கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | **60,000/-** | **60,000/-** |
| 5 | செங்கோட்டை நகராட்சி ஆடு அறுவை நிலையத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். | **35,000/-** | **35,000/-** |

அலுவலகக் குறிப்பு ;

1. மேற்கண்ட ஆண்டு குத்தகை இனம் 31–03–2022 உடன் முடிவடைய இருப்பதால் 01–04–2022 முதல் 31–03–2025 வரை மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் குத்தகை விதிகள் மற்றும் பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>மன்றப்பொருள்</u>**

செங்கோட்டை நகர சாதாரண உள்ளாட்சித் தேர்தல் 2021 நடைபெற இருப்பதால், சாதாரண உள்ளாட்சித் தேர்தல் பணிகளை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி பணிகள் மேற்கொள்வதற்கும் மற்றும் அத்தியாவசிப் பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/-செலவினத்தினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண் ; 585/2021/எச்1

அலுவலகக் குறிப்பு ;

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம்**

**அனுமதி வழங்கப்பட்டது.**